




ஓலை 150| ஓசை 273| நவம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## 'காவடிச் சிந்து' அண்ணாமலை ரெட்டியார்

# கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்

## பொருள்

அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை!

பாவகை : இணைக்குறள் ஆசிரியப்பா




வயலில் காலை வகையாய் நீட்டிட
இயலா விதையா
வயலில் விளைந்து
நயமாய் மகசூல் ஈந்திடும்?
துயரென மின்னல் மின்னிடா
உயர்ந்த வானம் மழைப்பொழி யாதே!

மழைக்கு முன்பே மழைவரும் என்றே
விழைந்து மயிலும்
குழைந்தே ஆடும்;
தழைத்த கார்முகில் மழையைப்
பொழியும் முன்பே மின்னல்
அழைத்தே மின்னும் பாங்குணர்த் திடுமே!




யானை முன்மணி யோசை வருமே;
வானை விட்டு மழையும்
யானையாய் வரும்முன்
வானை விட்டு
மானைப் போல
வானில் துள்ளும் மின்னல் ஆகுமே!

**இலக்கணக் குறிப்பு:**

ஆசிரியப் பா வகைகளில் இணைக்குறள் ஆசிரியப்பாவும் ஒன்று. முதலடியும் ஈற்றடியும் நான்கு நான்கு சீர்களாக அளவடிப் பெற்று, இடையில் இரு சீர்கள் கொண்ட குறளடியும், மூன்று சீர்கள் கொண்ட சிந்தடியும் கலந்து வருவதே இணைக் குறளாசிரியப் பாவாகும். ஒவ்வொரு பாடலும் ஓரெதுகையும் மூன்று சீர்களிலும் நான்கு சீர்களிலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனைப் பெற்றும் வரலாம். கட்டாயமில்லை. ஈற்றுச் சீரை ஏகாரத்தில் முடிக்கலாம்.

## பாவகை: நிலைமண்டில ஆசிரியப்பா

படைக்கும் செயலில் பதற்றம் அகற்ற
மடையென எண்ணம்
மனதினில் பொங்கும்
இடையினில் தோய்வும் இடறவே வைக்கும்.
உடைந்தே நொறுங்கினால் ஊக்கம் கெடுமே
தடையை அகற்றத் தனித்தே முயல
நடையினை மாற்றியே நாட்டமாய்ச் செய்தால்
கடைநிலை நிற்கக் கருத்தாய் முனைந்தால்
படையெனக் கூடிப் பலரும் உதவச்
சடையாய் உறுத்தியச் சஞ்சலம் தீர
அடைவாய்நீ வெற்றி அணியே.



கவிஞர் செ. கலைவாணி

குழம்பிய குட்டையாய் குன்றிய மனமாய்
அழுதே கிடந்த அற்ப நெஞ்சினை
விழுதாய் தாங்கிய விழுமிய வார்த்தைகள்
தொழுதிட வைத்தது துணையாய் நின்று

ஊட்டச் சத்தினை ஊட்டிய சொற்களும்
கேட்ட நொடியினில் கிளர்ந்த ஊக்கமும்
வாட்டம் போக்கியே வலிமையைத் தந்தது
கூட்டாய் துணிவும் கூடியே கொண்டது

என்னால் முடியும் எண்ணும் வேளை
முன்னே வழியும் முகிழ்ந்தே வந்தது
நன்றாய் நாளும் நம்முடன் பேச
வென்று காட்டலாம் விதிகள் மாற்றியே



கவிஞர் பூர்ணிமா சங்கர்

# என் ரோஜாக்களில்

எவ்வளவு தூய்மையாக
வைத்துக் கொண்டாலும்
எவ்வளவு உண்மையாகக்
கொண்டாடினாலும்
என் ரோஜாக்களில்
ஒரு முள்ளையேனும்தான்
தேடிக் கொண்டிருக்கிறீர்கள்!




கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

நீ
வெற்றியின்
முற்றுப் புள்ளியல்ல.
முயற்சியின் தொடர் வாக்கியம்.
சூரிய ஒளியே!
துன்பம் என்னும்
சுண்டு விரல்கள் அதை
மறைக்க முடியுமா?

நீ
புயலின் பயணம்.
உனக்கு எப்படி
பூக்கள் கறுப்பு கொடி
காட்ட முடியும்.?
தங்கத்துக்கு
நிகராக தவிட்டை
தரணியில்
தைரியமாக விற்க
முடியுமா?
முதலைகளின்
முன் கோபத்தை
ஓணான்கள்
ஒடுக்க முடியுமா?

நீ
காலத்தின்
கையில் கட்டப்பட்ட
கடிகாரம்.
உன் வேகத்திற்கு
யாரும்
தடை அமைக்க முடியாது.



சாய்வு நாற்காலியில்
அமர்ந்தபடி
சங்கடங்களுக்கு
சாமரம் வீசும்
சராசரி அல்ல நீ .
சாதனையின் வித்து
சகல மக்களின்
சொத்து .

நீ அன்றாடம்
கிழிக்கப்படும்
நாட்காட்டி அல்ல.
முன்னேற்றப் பதிப்பகத்தில்
அச்சிடப்பட்டு
அகிலம் எங்கும்
விநியோகிக்கப்படும்
தன்னம்பிக்கையின்
வரலாறு.

கவிஞர் முனைவர். முனியாண்டி

# இரவு

மௌனத்தின் மொழி அழகு
இரவிலோ பேரழகு
அனைத்தும் அமைதியாய்
ஆன்மாவின் சாட்சியாய்
அறிதுயிலும் அகிலம்
புல்லும் புள்ளினங்களும்
அனைத்து ஜீவராசிகளும்
உறக்கத்தின் பிடியில்
இரவின் மடியில்
இசைந்து இணைய
இறுக்கம் தளர்ந்து
இயல்பாய் இருக்க
இறைவன் கொடுத்த
ஈடில்லா கொடை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# அடையாளம்

உனக்கும்,எனக்கும்
இருந்ததில்லை
ஒருபோதும் இடைவெளி.

உண்மையறிய
பின்னோக்கி தள்ளு
உன் நினைவிழைகளை
தவறொன்றுமில்லை.

ஒரு புள்ளியில் பூத்தது
நமது ஆரம்பம்.

அனுமதி மறுக்கப்பட்ட
நாளொன்றினை உறிஞ்சி
நீயே உருவாக்கிக்கொண்டாய்
உனக்கான
விலகல் வட்டங்களை.

கவிழ்த்து விடு
சுயநலக்கோப்பையை.
நமக்குள் எங்கே விரிசல்?

விரிசல் விழுமென்ற
கற்பனையில்
உன்னை வலிய திணித்து
எதற்கு?

நிரப்பாமலே போகிறாய்
நீயுன் பிறப்பின்
அடையாளங்களை!



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# இனியவை கூறல்

நெஞ்சில் வஞ்சம் இல்லாது மெய்ப்பொருள் உணர்ந்தோரின்
பஞ்சாமிர்தமாய் வரும் சொற்களே இன்சொற்கள்

மனமுவந்து ஒருவருக்கு பொருளைக் கொடுத்தல் நலனே
இன்சொல் பேசி முகமலர்தலால் கிட்டிடும் உடனடி பலனே

முகமலர்ந்து அன்போடு இன்சொல் பேசும் வரமே
அகமகிழ்ந்து ஒருவன் செய்யும் அறத்தின் திறமே

.எப்போதும் எவரிடமும் இன்பத்துடன்
இன்சொல்லே பேசி திகழ்பவரிடமே
முப்போதும் துன்பம் தரும்  வறுமை சென்று சேராதே

பெரியோரை வணங்குதல் இன்சொல் பேசுதல் ஒருவருக்கு அணியே
உரியவை தவிர ஏனைய அணிகலன்கள் ஏற்படுத்தும் பிணியே

நன்மை தரும் சொற்களை ஆராய்ந்து இனிமையாகப் பேசுவோரிடம்
தன்மையாய் அறம் வளர்ந்தே தீமைகள் தீயிலிட்ட தூசாகுமே

நன்மையும் இனிமையும் நீங்காத சொல்லே
நல்வாழ்வையும் பயனையும் தந்தே செல்லுமே

பிறருக்குத் துன்பம்  தராத இன்சொல்லே என்றும்
மறவாமல் ஒருவனுக்கு இருமையிலும் இன்பம் தரும்

உன்னிடம் ஒருவன் இன்சொல் பேசினால் மகிழும் நீயே
தன்நிலை மறந்தே பிறரிடம் வன்சொல் வீசுகிறாய் ஏனோ?



இனிய சொற்கள் பலவிருக்க இன்னாதன பகர்தலே
கனியிருப்பக் காயை உண்பதற்கு நிகர்த்தலே

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# சந்திப்போமா இன்று சந்திப்போமா?

சிக்கிய பின்
சிந்தனை விழிக்கிறதே

தூண்டிலில் தான்
மீன் சிக்குமாமே

மீனின் விரிப்பில்
மாட்டியதோ மீளாமலே

மயக்கம் தந்த
மங்கையின் கண்களில்

வசீகரம் பூசியதாரோ?
வச்சிரம் தந்ததாரோ?

பார்வைகளின் சங்கமத்தில்
பதில் கிடையாதோ

பகீரென்ற இமையசைவிற்கு
பகல்களை பங்கிடலாமோ?

எக்கணமும் சந்திப்போமா
இன்று சிந்திப்போமா ?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# அடைக்கலம்

அடைக்கலம் என்று
வந்தோர் அனைவரும்
அவனை அடைந்து
அவலம் நீத்தார்.
அவர் தகுதி நோக்கான்;
அன்பினால் தன்
தகுதி ஒன்றே தேர்வான்

படகோட்டும் குகனும்,
சுக்ரீவ ராசனும்,
அசுர விபீடணும்,
ஒன்றே;அந்தப்
பரமார்த்த பரபிரும்மத்திற்கு.

சிரக்கம்பம் வைத்து
இறைஞ்சிய பாஞ்சாலியும்,
ஒன்றுமே கேளாத
வறியவன் குசேலனும்
கண்ணன் கண்ணுக்கு
ஒன்றே நிகர்.
பக்த அம்பரீசனும்,
பிரஹலாத சிறுவனும்,
உத்தவனும், விதுரனும்,
வீட்டுமனும்,அவன் கழலே
நிழல் என்ற கொண்டு
வென்றார் பரமபதம்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நான்

நான் என்ற இலக்கணம்
இங்கே எழுத்துப்பிழைகளின்
அடையாளமாய்

துயரங்களின் முகவரிகள்
என் வாழ்க்கை பாதையின்
முகங்களாய்

தோல்விகளின் ஓட்ட
பந்தயத்தில் நான் என்றும்
முதல்வனாய்

கண்ணீரின் கறைகள்
எனது மேனியெங்கும்
வேர்வை துளிகளாய்

தொலைந்து போகிறேன்
நாள்தோறும் துயரங்களின்
கைத்தடியாய்

நான் என்னும் உடல்
நடைபிணமாய் நடக்கிறது
வேதனையின் காயங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# ஒற்றை வார்த்தை

ஊரறிய தெரியும் இந்த அப்பாவி பார்வைக்கு
ஏன் இத்தனை மோசமான கதைகள்?

அவள் நல்லுள்ளம் கொண்டவள்
பாசக்காரி படித்தவள்
அனுபவமுடையவள்
இப்படிப் பேசியவர்களுக்கு மத்தியில்.

ஏன் அவளை அருவருப்பாக பார்க்கிறீர்கள்?
என்ன தப்பு செய்து விட்டாள் அவள்.

பாவி அவளுக்கே தெரியவில்லை
எல்லாரும் வரம்பு மீறி விட்டார்கள் என்று

புதையலாய் புதைந்து கிடந்த
அவளைப் பற்றிய நல்லெண்ணமெல்லாம்.
சுக்கு நூறாய் சிதைந்து போனது

அவள் மோசம் என்ற
அந்த ஒற்றை வார்த்தையில்!



கவிஞர் முஹம்மட் றாபி ஷேபா கரீனம், பாலமுனை

# கடைக்கண்ணால் மடை மாற்றிய காதலி



கனவில் வந்து
நினைவில் நின்றவளே
கனிவானேன் கண்ணே
காதலுற்றேன் உன்னிடமே

கரும்பின் சுவையாய்
கன்னத்தில் முத்தமிட்டாயே
அமுதம் சேமித்தவளே
அன்பான காதலியே

உள்ளத்தால் உருகினேன்
உணர்வுகளால் உயிர்த்தேன்
எண்ணங்களில் நிறைந்து
என்னுள் நுழைந்தாயே

இதயத்தின் ஓசையில்
இரண்டறக் கலந்தவளே
கடைக்கண்ணால் மடைமாற்றிய
காதலி நீதானே

பயணத்தில் தடுமாற்றம்
பருவத்தில் மனமாற்றம்
பளிங்குச் சிலையாய்
பளிச்சென்று ஒளிர்பவளே

பார்வையின் வீச்சில்
பாவையிடம் அடைக்கலமே
சஞ்சலமது மறைந்து
சங்கமத்தில் இனிதானதே

மஞ்சமது அழைத்திட
மங்கையிடம் தஞ்சமே
கொஞ்சும் இதழ்களும்
கோவைபழச் சிவப்பானதே

உயிர்நாடியின் துடிப்பில்
உள்ளமும் இதமானதே
காந்தமாய் ஈர்த்தாயே
காதலில் வீழ்ந்தேனே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்


# தோற்றுப் போகும்

தேடிப் பார்த்தேன் உலகில்
தெரிந்து கொண்டேன் அழகை !
இடை நெளியும், படரும் கரைகள்
எனக்குக் கிடைத்தது அனுபவம் !
ஜாடை காட்டும் மதுமலர்
ஆடை ஆக்கும் இலைகளை
காட்சி சிறகைத் தரும்
கற்பனை பறந்து வரும் !
நடை பழகும் நதிமகள்
இடை நெலியும் புதுமைகள்
பார்த்து ரசித்த நானும்
படரும் கரைகள் ஆவேன் !
குடை பிடிக்கும் ஒருமரம்
பாய் விரிக்கும் புல்வெளி
படுத்து உறங்கும் போதும்
பஞ்சனை தோற்றுப் போகும் !



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

அகம் அறுத்த அண்டர்
அணங்கின் சிறகு முறித்து
நிலம் அதிர பெருங் தீங்கு
இழைத்த தெவ்வர் திரள்.
அல்லவை நிழல் சூழ
முகம் திரிந்த முகவை.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# அல்லல் வரும்போது!

அசையும் தென்றலும்
அமைதியில் அழகாக
அப்படி மாறி
அதிர்வேட்டு புயலானால்
அமைதிப்படை மனிதனும்
அடுத்து புகலிடம் தேடி
அலைந்திடுவானே!

அருள்தரும் இறைவனும்
அரூபமாய் இருந்திடுவார்
அசுரத்தனம் மிகும் போது
அவதாரம் எடுத்தே
அமைதியை குலைத்து
அடுத்து போர் செய்திடுவார்!


அச்சமிகு வாழ்விலும்
அச்சமின்றி இருக்கவும்
அவசரப்படாமல்
அரசாட்சிக்கு காத்திருந்து
அமைதிப்படை கூட்டி
கூட்டாட்சி செய்திடலாம்!

அடுப்பூதும் பெண்ணுக்கும்
அவளுக்கும் படிப்பெதற்கு
அடுக்கடுக்கு கேள்வி
அத்தனைக்கும்
அமைதியாய்
அதிரடி படையில்
அடுத்தடுத்து சாதனையால்
அசத்திட்டாளே!

அமைதி குணமும்
அரிதானதே மாந்தர்க்கும்
அடுத்தவர் கெடுக்காதவரை
அரக்க குணமும்
அசலாக நுழைந்திட்டால்
அடிதடி அங்கே
அம்சமாக நடந்திடுமே!

அமைதியாக விரும்பி
அச்சான பத்திரிக்கையில்
அழகு பெயரிட்டு
அனைவரையுமே
அன்பால் அழைத்து
அறுசுவை உணவு
அலுக்காமல் படைத்து
அலங்கார ஊர்கோலத்தில்
அச்சமூட்டும் வான்வெடிகளால்
அமைதிபடைக்கூட்டமும்
அங்கங்கே சிதறியதே!

அமைதிப்படையும்
அக்ரம படையாகுமே
அல்லல் வரும்போது!



கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# பெட்டி பிசாசே

வகை வகையாக அலைபேசிகள்
இருந்திட்ட போதிலும்.
தொலைக்காட்சி பெட்டிய
சிலருக்கு விருந்தாகுமே.

எத்தனை தொழில்நுட்பம்
வந்திட்ட போதிலும்.
உன் வருகைஇன்னும்
குறையவில்லையே.

சினிமாவை ரசிக்க வைக்குமே
சமையலை ருசிக்க வைக்குமே.
விளையாட்டை பொழுதாக்கிடுமே
களவுகளை செய்ய தூண்டிடுமே.

நலவுகளையும் செய்ய
வழித்தருமே செய்திகளை
அறிய தந்திடுமே.

பொது அறிவையும்
பெருக்க வைத்திடுமே
அனைவரின் நேரத்தையும்
குறைத்திடுமே.


காட்டுமிராண்டித்தனத்தையும்
காட்டிடுமே.
எண்ணங்களை வண்ணம்
ஆக்கிடுமே.
ஒலியும் ஒளியுமாய் வந்து
குட்டி பிசாசே.



தொலை நிகழ்வை அருகில்
காட்டிடுமே.
எம்மை கவர வைத்திட்ட
பெட்டி பிசாசு நீயே.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை (இலங்கை)

கார்மேக இருளை அகற்றிய
அடங்கா தீப்பிழம்பே
தனித்துவம் காத்திட
போராடிய பெரும் படையே
ஈழத்தின் திருமகனே
தமிழ் பெருங்குடியின்
போராளி தலைவனே
சிங்களத்தை அச்சுறுத்திய
சிம்ம சொப்பனமே
விடுதலை புலிகளின் தலைமையே
தாயகம் காத்திட
இன்னுயிர் நீர்த்த காந்தள் மலரே
எங்கள் மேதகுவே
உம்மை வணங்கி வாழ்த்துகிறேன்



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# கடலும் கிழவனும்

கண்டேன் முகநூலில் நூலொன்றது நம்மில்லமதில்
கண்டிப்பாயிருக் கவேண்டுமென்றுரைத்தார் சித்தமருத்துவர் சிவராமனுமே;
கடலும் கிழவனுமென்பது அந்நூலினருந் தமிழ்ப்பெயரேயது
கடல்தாண்டி தமிழுக்குவந்த நல்லொதொரு மொழிமாற்றுநூலே!

அகிலமறிந்த ஆங்கிலயெழுத் தாளரெர்னஸ்ட் ஹெமிங்வே
ஆர்ப்பரிக்கும் கடல்சார் மக்களின் வாழ்வை
அழகுறவொரு புனைகதைப்பெரிதாய்ப் படைத்தனரதுவே அவர்தம்படைப்பில்
அந்தியாயமைந்ததொ டுவுலகப் புகழ்மிகு நோபல்பரிசை
அவரும்பெற்றிட வைத்துவானந்தம் அளித்தது அவருக்கே!



கியூபா நாட்டின் செம்படவர் ஒருவர்
கிழவனாய் ஆனபின்பும் உண்ணும் உணவுக்கும்
உடுத்தும் உடைக்கும் வேறொருவரை அண்டாதுதன்
உழைப்பை நம்பி வாழ்ந்திடும் வாழ்வில்
ஊழ்வினை விளையாடவவர் அதனையெதிர் கொள்ளலும்
ஊரினில் வாழுமொரு சிறுவன்மீது அவரும்,
உரிமையுடன் கிழவனிடம் நேசம்காட்டு மந்தசிறுவனும்
ஊழையும் உட்பக்கம் கண்டுகளித்து ஆட்டம்காட்டிய
மார்லினுமெந்தன் மனத்தை கவர்ந்தனர் இந்நூலிலே!

சாண்டியாகோ என்றந்த செம்படவர் தன்முயற்சியில்
சாதிக்காது தோற்றதாய்ச் சிறுவனிடம் புலம்பினாலும்
சத்தியமாய்ச் சொல்கின்றேன் வென்றது மார்லினன்றுவது
சாண்டியாகோவே யதுயெப்படியென வினவுவீரென்றா லதுவள்ளுவர்
சொல்லியதோர் திருக்குறள்வழி நின்றென அறிக!

இயற்கையென்றொரு தமிழ்த்திரைப்படம் காட்டியதன்று தமிழ்க்கூறும்
நெய்தல் வாழ்க்கையெப்படி இருக்கும் என்று!
அதனழகை யொத்ததே இந்நூல்காட்டும் வருணைகள்!
அய்யன்வள்ளுவன் கானமுயலெய்யச் சென்றுவென்ற அம்பினைவிட
ஆற்றல்மிகு யானையைப் பிழைக்கச்செய்த வேலேந்தல்
இனிதென்றவழி அடியேனும் சொல்வேன் மார்லினைவிட
நனிசிறந்தவர் மார்லினிடம் தோற்ற சாண்டியாகோவே!

குறள் 772:
கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது..

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# மழலைகள்

பிழைகள் ஏதும் காணாத முடியாத சந்திரங்கள்
கொஞ்சிடும் மொழிகளில் அனைவரையும்
தன் வயப்படுத்தும் கிளிகள்
கவலைகள் ஏதும் இன்றி
அழகாய் சுற்றிச் திரியும் பட்டாம்பூச்சிகள்
தனக்கென ஓர் பாதையை அமைத்துக் கொண்டு
அதன்வழி ஓடிச் செல்லும் மான்கள்
இரவு நேரங்களில் வீட்டினை
அலங்கரிக்கும் விண்மீன்கள்
சோர்வின்றி தினமும் வந்துதிக்கும் சூரியன்கள்
கூட்டு வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தார்போல்,
எப்போதும் சேர்ந்துண்ணும் காக்கைகள்
புத்தாடைகள் உடுத்தும் போதெல்லாம்
தனி பொலிவு பெறும் மயில்கள்
பெற்றோரிடம் மட்டும் பிதற்றலாய்
தனி மொழி பேசும் மைனாக்கள்
எப்போது பார்த்தாலும்
நிறம் மாறிடாத வானவில்கள்
தன் விழிகளின் பெருமை அறியா மீன்கள்
குறும்புகள் பல செய்துவிட்டு
குட்டியாய் புன்முறுவல் செய்யும் செல்லங்கள்
சோலையில் பூத்த மலராய் ,
பிரம்மனின் அற்புதப் படைப்பாய்,
வீட்டில் பூத்த எல்லையில்லா செல்வங்கள்
"மழலைகள் ".



கவிஞர் ரா. கௌசல்யா, சேலம்

# துறவி ஆகிறேன்

மரம் அசைத்து
தென்றலை அழைக்கிறது
மனம் அழுது
உன்னை அழைக்கிறது.
இரவு நனைந்து
புல்லை சுத்தப்படுத்தும்.
இதயம் நனைந்து
என்னை சுகப்படுத்தும்.
இசையைக் கேட்டு
உலகம் அமைதி தேடுகிறது.
இதயத்தைத் தேடி
கவிதை கண் துடைக்கிறது.
மொழியைத் தீண்டி
மௌனம் பெருமை கொள்கிறது
விழிகளைத் தாண்டி
மனம் நுழைந்து மகிழ்கிறது.
அழகின் மாயையில்
பூக்கள் புன்னகைக்கிறது
அன்பின் உயிர்ப்பில்
புன்னகை நிலைத்திருக்கிறது
கற்பனை சுகத்தில்
எழுத்துகள் எழுந்து நிற்கும்
காதலின் சிறப்பில்
எண்ணங்கள் சிறகு விரிக்கும்
வாழ்க்கை தெரிந்த பின்னே
உலகம் புரிந்து கொண்டேன்
காதல் வந்த பின்னே
எல்லாம் துறந்து விட்டேன்.



கவிஞர் இளையவன் சிவா

# சில ஹைக்கூ

முத்து வரும் முன்
காத்திருக்கும் சிப்பி
இது வாழ்க்கை பாடம்.

பனித்துளி வாழும்,
சூரியன் வந்த நேரம்
சூன்யம் மிச்சம்.

மௌனத்தின் மொழி
முடிவில்லாப் பெருங்கடல்
அன்பின் அலைகள்.

நதி ஓட்டத்தை,
மீண்டும் மீண்டும் பார்க்க
பிறக்கும் புரிதல்.

விழும் கதிர் போல்
தலை தாழ்த்தும் நெற்கதிர்
பணிவே அழகு.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# துர்கையின் அருள்

இராகு நேரத்தில் உன்னை தேடி வந்து
எலுமிச்சை விளக்கில் பஞ்சு திரி போட்டு
பசும் நெய்யை ஊற்றி!
என் துன்பமெல்லாம் நீங்க
உன்னை மனதார வேண்டுகிறேன்.
அரளி பூ மாலையாக தொடுக்கும் போது
பக்தியால் மனம் உருகி பாமாலை பாடுகிறேன்
அம்மன் ஆலயத்தில் நுழைந்தவுடன்
என் தேகம் சிலிக்கிறது.
கற்பூர தீப ஒளியில் என்னை மெய் மறந்து
உன் அழகை பார்க்க என் மனம் விரும்புகிறது.
என் துன்பங்களை போக்குபவள் துர்க்கையே!
திரிசூலி தாங்கி தீமைகளை அகற்றி
நன்மைகளை அடைய வைக்கிறாள்.
மஞ்சள் முக அழகில் அழகான பட்டு வண்ண உடுத்தி
கம்பீரமாக சிங்க வாகனத்தில் வீற்றிருக்கிறாள்
மனதில் துணிவை தரக்கூடியவள்
துர்க்கை வெற்றிக்கு உரியவள்
துர்கையே அண்ட சராசரமும் உன் காலடியில் தான்
தேவி துர்க்கையே! ஜெயதேவி! தேவி துர்க்கையே!



கவிஞர் மா. நந்தினி, சேலம்

# மாட்டு வண்டி



அன்று பாதையில் மாட்டு வண்டி!
அன்பை வழங்கிய உறவு வண்டி!

பாதையில் நெரிசல் இல்லை
பாசமுடன் நாமும் செல்வோம்
போக்குவரத்து பொலிசும் இல்லை
புகை இல்லை எரிபொருள் தேவையும் இல்லை!

ஆட்டோ என்று சொல்லிடும்
முட் சக்கர வண்டியில்லை
பள்ளிக்கு போவதற்கு!
மாட்டுவண்டி உண்டு
மகிழ்ச்சியுடன் நாம் செல்வோமே!

சிரித்து மகிழ்ந்து சென்றோமே
சீசன் டிக்கெட் வாங்கமாட்டோமே!
பாடல்கள் பாடியே சென்றோமே
பறவை போல மகிழ்ச்சியில் பறந்தோமே!

ஆண் பெண் என்ற பேதமில்லை
வண்டி ஓட்டுபவன் மனிதனாய் இருப்பான்!
சூழல் சுத்தம் விபத்து இல்லை
சுந்தரம் பாடிடும் காலம்!

உறவுகள் உடனிருக்க
உற்சாகம் பொங்கும் மனதில்
இப்போ மாடு தெரியாது
மாட்டு வண்டியும் தெரியாது!

வரலாறு படிப்பதற்கு
வாங்கி காட்டினோம் மாட்டுவண்டி
வசந்த காலம் தொலைத்து
வாங்கி நிற்கிறோம் வரண்ட காலம்!

வரலாறு படிப்பதற்கு
வாங்கி காட்டினோம் மாட்டுவண்டி
வசந்த காலம் தொலைத்து
வாங்கி நிற்கிறோம் வரண்ட காலம்!

உடற்பயிற்சி இல்லை
நல்ல உறக்கம் இல்லை
உணவு என்று வித்தியாசமான பெயர்களுடன்
குடும்பம் வாழ்கிறது!
நான்கு மூன்று என்ற உறுப்பினர்களுடன்!

மாட்டு வண்டியும் போனதே
மன மகிழ்ச்சியும் போனதே
சமூக வட்டமும் சுருங்கியதே
சாக்கடையில் நாமும் விழுந்தோமே!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை, (இலங்கை)

# விதைப்பு

என் தம்பி
தன் நிலத்தில்
நெல்
விதைத்தான்!
***

எவனோ வந்து
அந்நிலத்தில்
நெருப்பை
விதைத்தான்!
***



அப்போது
எரிந்ததோ
நிலமும் நெல்லும்
மட்டுமல்லவே.
***

எல்லோரதும்
வயிறுகளும் தான்
வாழ்க்கையும்தான்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், கிழக்கு மாகாணம் (இலங்கை)

# உலகை வென்றது

கண்கள் பேசும் மொழியால்
இதழ்கள் வாசம் செய்கிறது
உன்னிதழ்கள் பேசிய மொழியால்
இதயம் சுவாசம் செய்கிறது.



உன்னைக் காண கண்கள்
தவம் செய்து நிற்கிறது
தோளில் சாய்ந்து இளைப்பாற
உள்ளம் துடித்து இருக்கிறது.

தென்றல் வீசும் வாசம்
என்னைத் தழுவ வந்தது
உன்னை எண்ணி நின்றதும்
அழைக்க என்னோடு வந்தது.

வானும் மண்ணும் சொன்னது
என்றும் உண்மை உள்ளது
பொய்மை தனித்து நின்றது
உண்மை காதல் வென்றது.

காலம் பதில் சொன்னது
கால்கள் தேடிச் சென்றது
உள்ளம் இரண்டும் இணைந்தது
உலகம் போற்ற வாழ்ந்தது.

காதல் உலகை வென்றது
இதனால் அன்பு மலர்ந்தது
மண்ணில் மாற்றம் வந்தது
மனிதம் தழைத் தோங்கியது.

கவிஞர் ஆதி. சுப. சரவணன், புதுச்சேரி

# உழைப்பின் மேன்மை

உழைப்பின் மேன்மையை
உலகுக்கே உணர்த்தும்
இயற்கையின் செயல்தான்
இனிய பாடமே.

ஓடும் மேகம்தான்
உணர்த்திடுதே வாழ்வியலை
அசையாத வாழ்வு பயனற்று போகும்
ஓய்வில்லா ஓட்டமே வெற்றியை தந்திடுமென
உணர்த்துகின்ற பாடமே.



ஒற்றுமையின் மாண்பினை
மனிதனுக்கே உணர்த்திடும்
*கூடி கொண்டாடிடும்*
காக்கையின் செயலே.


மலையிலே தோன்றி நதியிலே உருண்டு
நெடிய பயணத்தில் தேய்ந்து தேய்ந்து
தூரந்து போகாமல்.. புதிய பிறவியாய்
ஜொலிக்கும் "கூழாங்கல்"
உழைப்பின் மேன்மையை உணர்த்திடும் பாடமே.

சடசடக்கும் அருவி ஆர்ப்பரிக்கும் அலை
வீசிடும் காற்று இயற்கையின் செயல்தான்
ஓய்வில்லா உழைப்புக்கு உதாரண அடையாளங்கள்.

ஜெயிக்காத கனவென்று வாழ்விலே இல்லையே
இலட்சிய கனவினை நிச்சயமாய்
ஆக்கிட ஓயாத உழைப்பே ஒரு நாள் உயர்த்திடுமே.

கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# மனதின் காயங்கள்



தோற்றப் பளபளப்பில்
நகைப்பிற்கு குறைவின்றி
கூத்தாடியது புறம்

ஆகா அது தீர்ந்தது
இதுவும் கடந்தது
எதுவும் தீராது நதிப்போல்
ஆனாலும் அகம் அடிக்கடி
பேசுகிறது

ஆறியதென நினைத்தாயோ
அழிந்ததென நினைத்தாயோ
உன்னுள் ஒரமாய் புரையோடி
புதைந்துள்ளேன்

கீறி கீறி கிழித்தெறிந்து
நாளையும் நேரத்தையும்
நள்ளிரவில் நாகம் போல்
சீறித்திரிக்கும்

இம்மனக் காயத்தை
மடிவதற்க்குள் ஆற்ற வழியுண்டோ

காயங்கள் தீர எவ்வழிக்கு செல்ல
கூசாது பேசும் குறுகுறுத்து
பார்க்கும் பார்வைக்கு.

எள்ளளவு கஷ்டமும்
எனக்கில்லையென்ற தேற்றலில்
முதுகு சுமக்கும் வார்த்தைப்
பொதிகளை கழற்றி எரிய
இடம் தேடும் மனம்
பல காயங்களை சுமக்கிறது

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# சேமிப்பே பாதுகாப்பு

பிறப்பு முதலே பிறவியில் சேமிப்பு தேவையே
மறக்கா செயலாய் மனதில் கொள்வோமே
திறந்த மனதாய் திகழும் உயிராய்
நிறமாய் ஒளிரும் நித்திரை மனமே

தவழ்ந்தது முதலே தங்கமாய் வளர்க்க
உவந்தே சேர்த்திடும் உன்னத சேமிப்பே
சிந்தனை முழுதும் சிறப்பான உயரவே
வந்தனை செய்யுமே வளமையின் மகிழ்வாய்

நோயின் கொடுமையால் நொந்து வருந்தினால்
தாயாய் காக்குமே தரணியில் உயர்ந்தே
வென்றிடும் நட்பாய் வெகுமதியாய் சிறந்தே
சென்றிடுமே செழிப்பாய் செந்நீர் உணர்வாய்

தேடிடும் பண்பில் தேற்றிடும் நட்பே
கூட்டிடும் என்றுமே கொள்கையின் வனப்பில்
எதிர்கால இன்பம் என்றுமே பெருக்க
மதியில் உதிக்கும் மகத்துவ பண்பே

பிள்ளையின் எதிர்காலம் பிரமாதமாய் சிறக்க
வெள்ளமாய் பெருக்கும் வெற்றியின் வனப்பே
பிள்ளையின் எதிர்காலம் பிரமாதமாய் சிறக்க
வெள்ளமாய் பெருக்கும் வெற்றியின் வனப்பே



தேவைகள் ஏற்படும் தேர்ந்திடும் போதும்
சேவையாய் நின்றிடும் சேர்ந்திட்ட பண்பாய்
கூட்டிடும் என்றுமே கொள்கையின் வனப்பில்
எதிர்கால இன்பம் என்றுமே பெருக்க

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# உன் குழந்தைத்தனம்

கடற்கரை மணலில்
குழந்தைகளோடு
நீயும் ஒரு குழந்தையாய்
கொஞ்சி விளையாடியதன்
அழகை கண்டு
நானும் ஏன் அந்த கடல் மீன்களும் கூட
குழந்தையாய் மாறியது
நீ கொஞ்சி விளையாட



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

# தமிழ்த்தாயின் தியாகச் செம்மல்கள்





கார்த்திகைத் திங்கள்
கனலாய் மனங்கள்
வார்ந்தோடியது குருதிவெள்ளம்
வழிநெடுக ஆறாக

பார்த்தாறா நெஞ்சம்
பரிதவித்து கதறும்
கூர்ந்த ஆயுதங்கள்
குத்திக்கிழித்த தேகமே

மார்தட்டி நின்று
மகத்துவம் படைத்தனர்
போர் இட்டுப்
போராடிய வேங்கைகளே

பூர்வீகமான தழினத்திற்கு
பூர்வீகஜென்மம் கொடுத்திட
நேர்த்தியான தேர்வை
தேசத்திற்காக எழுதியவர்கள்

வேர்விட்டு முளைக்குமுன்
வேடதாரிகள் அறுத்திட
வீறுகொண்டெழுந்து
விவேகம் கண்டனரே
போற்றும் தாகம்
பொங்கி யெழுமே

நட்ட விதையும்
நாளை முளைக்குமே
பட்டதுன்பங்கள் பஞ்சபூதமும்
அறியுமே

பார்வியந்து காண்ட
பாரிய வியப்பிது
சீர்பாதம் போற்றி
சிந்தையில் வைத்தோமே

தமினினத்தின் தியாகச்
செம்மல்கள் மாவீரர்களே
தமிழ் மண்ணுக்காய்
தாயகம் வேண்டினரே
அஞ்சா வல்லமையின் வரலாறிது
கல்லறைகள் பேசுமே

கவிஞர் கிருஷ் அபி

கவிதை எழுதுவதற்கு
பேனாவை பயன்படுத்தினாலும் கூட
அதில் இருக்கும் தலையெழுத்து
என்னுடையது என்பதை
மறந்து விடாதே.



கவிஞர் மோனிஷா

# தலைப்பு

கவிதைக்குள்
ஒளிந்திருக்கும்
தலைப்பின்
கனம்
கவிதையை
லேசாக்குகிறது



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

அலைபேசி கருவிழிகளை
களைந்திருக்குமோ

கலாச்சாரமெனும் வார்த்தை
காணாமல் போயிருக்குமோ

நெருங்கிய உறவுகளும் கூட
தூரமாய் தொலைந்திருக்குமோ

மனித மூளையை அறிவியல்
ஆக்கிரமித்திருக்குமோ



நோய்களை மருந்துகள் விரட்டி இருக்குமோ
மருந்துகளை நோய்கள் விரட்டி இருக்குமோ

மது மனிதனை குடித்திருக்கக்கூடுமோ

வண்ணத்துப்பூச்சியும் சிட்டுக்குருவியும்
வார்த்தைகளிலாவது வாழ்ந்திருக்குமோ

இயற்கைக்கு இரு கைகளும்
வெட்டப்பட்டிருக்குமோ

கவிஞர் அசோக் மேத்தா, ரியாத் (திருவாரூர்)

# இன்னா செய்தார்க்கும் இனியன செய்



தீங்கு செய்வார்
தீங்கை ஒட்டி

எங்கும் இன்பம்
என்றும் கூட்டி

செய்யும் நன்மை
சேர்க்கும் ஆக்கம்

உய்யும் பண்பே
உண்மை சொர்க்கம்

நன்மை செய்தால்
நன்மை உண்டு

இன்னல் செய்தால்
இன்னல் உண்டு

வன்மம் இன்றி
வாழ்க்கை எல்லாம்

கன்னல் செய்கை
காட்டும் மேன்மை

சிந்தை யெல்லாம்
செம்மை கொண்டு

நிந்தை நீக்கி
நன்மை செய்வாய்

இன்னா செய்தல் விட்டு

நன்மை சூழ்க
நன்றே செய்க.

கவிஞர் தி. செல்வராணி, திட்டக்குடி

நம்முடன் பின்னியிருக்கும்
நிழலை விட
நிழலாக பின் தொடரும்
நட்பு
உயிரற்ற ஆன்மாவையும்
மீட்டுவிடும்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்

கூடுதலாய் ஒரு மின்னல்
கைகொண்ட தருணமது.

வாடிக்கையாக வந்துபோகும்
பேருந்து
ஆமையாய் ஊர்ந்து போகும்
வாழ்வு
போராடும் கணத்தை தின்றபடி
கரையும் கனவு!

எதேச்சையாக கிடைத்த
சில்லறைபோல்
வெகுநாளாய்ப் பூட்டிக்கிடந்த
கோவிலின் கருவறைவிட்டு
வெளிச்சத்தை பரப்ப
வெளியே வந்த தேவி நீ!



உன் வெளிச்சத்தை
உண்ணும் வேட்கையில் நான்

இருப்பினும்

என் வாழ்வெனும்
இருண்டகோட்டின் மீது
வண்ணமெனும் வானவில்லை
வரைகிறாய் நாளும் நீ!

நீ பங்கிட்ட கூடுதல் மின்னலில்
நம் வாழ்வெனும் கோபுரம்
வானோக்கி எழுகிறது பிரமாண்டமாய்.

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# ஏனோ!


என் கற்பனை அவனியில்
எனக்கு நானே காதலில் கதைப்பதும்
எனக்கு நானே கண்ணீர் துடைப்பதும்
எனக்கு நானே ஆறுதலாய்
நிற்கவும் பழகியே போக

இன்று எதிர்ப்பார்ப்பின் வலியில்
சிக்கி தவிக்கும் மீனாய்
மூச்சிறைக்க ஆழமாய் இறங்கியே
காதலின் கனவுகளை
ஒன்று இல்லாது ஒப்பித்த
உறவுடன் நான் ஏனோ கதைக்க
அதரங்கள் அசையவில்லை

ஏனோ கவி எழுதிட கரம் துடித்தும்
மனமில்லை
ஏனோ இரக்கமின்றி சாகின்றேன்
அணு அணுவாய்

என்று பிழைத்து பிறை
பார்த்து புன்னகைப்பேனோ

அதையும் எதிர்ப்பார்த்து
நிற்கிறேன் ஒற்றை முளைப்பயிறாய்



கவிஞர் சு. கார்த்திகா, பழனி

# தேடுதல்

தொலைந்த பொருளைக் கண்டுபிடிக்கத் தேடுதல்!
தெளிவில்லா நிலையில் தெளிவடையத் தேடுதல்!
தொலைந்தவற்றை மட்டுமின்றி தொட்டுப் பார்க்காத
பல பாதைகளின் தேடுதல் வாழ்விலுண்டு!
நானெவன் என்றுணர தனக்குள் தேடுதல்!
இணையத்தில் தகவலை, தரவைத் தேடுதல்!
உண்மையை அறிந்திட அகத்தின் தேடுதல்!
காணாமற் போனவரைக் கண்டுபிடிக்கத் தேடல்கள்!
தேடுதல் வினைச்சொல்! தேடல் பெயர்ச்சொல்!
ஒவ்வொரு நாளும் ஒளிபரவிய புதியவானம்!
வெவ்வேறு தேடல்களை நம்மனம் நாடும்!
நாளும் இரைதேடி பறக்கின்ற புள்ளினங்கள்!
அன்பைத் தேடி ,அமைதியைத் தேடி
என்றும் தொடர்ந்திருக்கும் மனிதர்களின் தேடல்கள்!
ஆன்மிகத் தேடல்கள்! அறிவுசார் தேடல்கள்!
எத்தனையோ இரகசியங்கள் ஒளிந்திருக்கும் இப்புவியில்!
நித்தமும் அவற்றை அறிந்திடத் தேடல்கள்!
விதவிதமாய் அனுபவங்களை அளித்திடும் தேடல்கள்!
நிறைவடையாமல் நம்மை நிறைவாக்கும் தேடல்கள்!
தேடல் என்பது உள்ளவரை வாழ்வில் சுவையிருக்கும்!
தேடியது கிட்டினால் மகிழ்வுண்டு! அஃதின்றேல்
தேடுவதைத் தொடர்வதில் ஏக்கத்தால் துன்பமுண்டு!
அடுக்கடுக்காய் கேள்விகளை அன்றாடம் எழுப்பிடும்
விடுகதையாம் வாழ்க்கை! விடை கிடைக்க
தேடுதல்கள் தொடரட்டும்! தெளிவு பிறக்கட்டும்!



கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி

# கற்பனையில் நான்





தகுதியுடையதுக்கு மட்டும்
ஆசைப்பட
முடிவுக்கான காத்திருப்பில்
உள்ளம் அமைதி கொள்ள
முன் அபிப்பிராயமின்றி
சொல்வதை உள்வாங்க
தகுதி உடையோரால்
கோரப்படுகின்ற
அத்தனை புத்திரீதியான
சரீரரீதியான
பொருளாதார உதவிகளை செய்ய

செல்வ செழுமை செல்வாக்கு
கல்விதெளிவு புத்திதெளிவு
பேச்சாற்றல் எழுத்தாற்றலில்
மேம்பட்டவர்களை ஒப்பீடு செய்து
பொறாமை கொள்ளாமல் இருக்க

தொடர் தோல்வியிலும்
விடாதுமுயற்சி செய்ய
வசை மொழியில்
அதையே நினைத்து
மனம் நோகமல் இருக்க

வெற்றியும் பாராட்டும்
அங்கீகாரமுமான பொழுதுகளில்
அவைகள்
புத்திக்கு செல்லாமல் இருக்க
அறியாத விஷயத்தை
இருப்பைக் காட்டிக்கொள்ள
பேசமால் இருக்க

மற்றவரின் சாதனைகளை
சொந்த சோகம் ஒதுக்கி
பாராட்டு கொடுக்க
ஏக்கமும் எதிர்கால பயமும் இல்லா
இந்த கணத்தில் மட்டும்
வாழும் பள்ளிப்பருவம் செல்ல

இத்தனையும் ஒன்று சேர
நான் மகான் இல்லாததால்
கற்பனையில் நான்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கலைமகளை வணங்க மூத்தோர்கள் சொன்னார்கள்
சரஸ்வதி பூசை இன்று புதுவிடியல் என விடியும்
கல்லாமை இல்லாமை இனியும் ஆகவேண்டும்
கற்றார்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பென்போம்
அரிச்சுவடிகளை படையலிட்டு வணங்கிடுவோம்
நூல்களையே தெய்வம் ஆக்கி வணங்கினார்கள்
கலைமகளாய் பாவித்து வணங்கி நிற்போம்
பாரதியின் புதுப்பெண்ணே என்றுமே வந்தனம்
புதுப்புனலாய் வாழ்த்துச் சொல்லி மகிழ்வேன்
விஜயதசமியும் சரஸ்வதிபூசையும் சிறந்திடட்டும்



கவிஞர் இரா. சீ. பாலகுமார், சந்தோசபுரம் (சென்னை)

அமைச்சர் மணிமாறனின் உதவியாளன் தலையை சொறிந்து கொண்டு நின்ற போது முதலில் அமைச்சருக்கு புரியவில்லை.

"அய்யா.அந்த நீலாங்கரை பங்களா வாங்குற செய்தியை எத்தனை முறை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறது என்று தான் புரியவில்லை"? என்றான் உதவியாளன் முத்து.

"ஆங்... முத்துராமன் எதையும் ஆதாயமில்லாமல் தேட மாட்டான்" என்ற அமைச்சர் " நீ ஒண்ணு பண்ணு. அந்த பிரபுவிற்கு ஒரு போன் போடு. அவர் தான் கொரோனா மருந்துச் செடியை கொண்டு வர்றேன், என்றார்.

ஆஆமா . நீ ஒரு உதவியாளன். இதை ஏன் முந்தா நாளே எங்கிட்டே சொல்லலை..." என்றார் கோபத்தோடு.

"முந்தா நாள் என்ன... நேற்றும் தான் ஞாபகப்படுத்தினேன். உங்களுக்கு அந்த இன்பா ஞாபகத்திலே எல்லாமே இரண்டாம் பச்சமா போயிடுது",

"ஓ.. அந்த இன்பவல்லிக்கு ஒரு போனப் போடு"

"அய்யா மொதல்ல இந்த கொரோனா மருந்து கம்பெனிக்காரன் கூப்பிடுறான். அவனுக்கு பதில் சொல்லுங்க." என்று அலைபேசியை நீட்டினான்.

"ஏண்டா. இதெல்லாம் நீ பேசி தீர்க்க வேண்டியது தானே? சரி...சரி... கொண்டா.. " அலைபேசியை வாங்கி, " யாரு? தாமோவா... சொல்லு" என்றார்

" நான் அட்வான்ஸ் ஒரு கோடி கொடுத்து ஆறு மாசமாச்சு அது ஞாபகம் இருக்கா?" என்றது எதிர் முனை

"தாமோ... ஏன் வீணாகக் கோப்படுகிறாய். நீ குடுத்த பணம் கூட அப்படியே தானிருக்கிறது.பிரபு நல்ல செய்தியாய் வைத்திருப்பார் கேட்டுச் சொல்லட்டுமா?" சிரித்தார் அமைச்சர்.

"சும்மா சிரிக்காதேய்யா அசிங்கமா இருக்கு. இந்த வாரத்துக்குள்ளே செடி வரல்லேண்ணா பணம் திருப்பி வரணும் புரிந்ததா?"

"அட. போப்பா.. எப்பவும் விளையாடிகிட்டே இருக்கே.. இந்த அமைச்சர் மணிமாறன்கிட்டே ஒரு வேலைய ஒப்படைச்சா எப்பவாவது முடியாமல் இருந்திருக்கிறதா?" என்று சொல்லி விட்டு "ஏய் முத்து. அந்த பிரபுவக்கூப்பிடு" என்றார்.

பிரபு எதிர் முனையில் வந்ததும் " சாரி. சார். அமைச்சர் மணிமாறனின் உதவி பேசறேன். " என்று சொல்லி விட்டு அமைச்சரின் கையில் போனைக் கொடுத்தான்.

" என்ன பிரபு... நேரடியாவே விசயத்துக்கு வாறேன். ஆமா கை நீட்டி பத்து லட்சம் வாங்கிட்டுப் போனியே.. கொரோனா மருந்துச் செடி கிடைச்சா... என்ன தான் சொல்லப் போற..." அமைச்சர் மணிமாறனின் முகம் கொஞ்சம் சிவக்க ஆரம்பித்தது.

" சார். இன்னும் ரெண்டு நாளையிலே நல்ல செய்தியோட வர்றேன் சார்" "இந்த சார் மோருக்கெல்லாம் ஒரு குறைச்சலுமில்லே.. நீ என்ன செய்வியோ தெரியாது. எனக்கு அந்த மருந்து செடி வேணும் புரியுதா?" என்றார்.

" சார். ஒரு சின்ன பிரச்சினையாகி விட்டது. தேடினவனுவ இப்போ மருத்துவ மனையிலே இருக்கானுவ... இன்னும் எப்படியும் ஒரு வாரத்துக்குள்ளே வந்துருவானுவ.. நான் நேரடியாக செடியக் கொண்டு தந்து விடுகிறேன் சார்"

"சரி. சீக்கிரம் எதையாவது செய்து அந்தச் செடியக் கொண்டாந்துரு. இங்க அந்த மருந்து கம்பெனிக்காரனுவ.. என்னைப் போட்டுத் தொளைச்சி எடுத்துக்கிட்டுருக்கானுக.."

"சரி சார். ஏறக்குறைய கண்டு பிடிச்சாச்சு. எப்படியும் இரண்டு வாரத்துக்குள்ளே உங்க காலடியிலே கொண்டு வைக்கிறேன் சார்"

" அந்த பசங்களுக்கு எதுவும் சந்தேகம் வரலியே?"

"என்ன சார். நாம அப்படி நடந்துக்குவோமா என்ன... நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க.. நேற்றே முடிஞ்சிடுமுண்ணு தான் இருந்தேன். ஒரு சின்ன ஆக்ஸிடெண்டாகிட்டுது.."

"என்னய்யா. ஏதாவது அடி கிடி பட்டியா"?என்றார் அமைச்சர் மணிமாறன்.

"அதெல்லாம் ஒன்னுமில்லே சார். வெண்ணெய் திரண்டு வரும்போது தாளி ஒடஞ்ச கத மாதிரி ஒரு சின்ன பிரச்சினையாகி விட்டது. "

"யோவ். பிரபு கொஞ்சம் கவனமா இருந்து செயல்படுங்க. அந்த மருந்துக் கம்பெனி காரங்கிட்ட இன்னும் மீதி பணம் வாங்க வேண்டியதிருக்கு. எல்லாம் நீ செய்யறத பொறுத்து தானிருக்கு"
"கவலைப் படாதீங்க சார். சீக்கிரம் நல்ல செய்தியோட நேரிலேயே வர்றேன்" என்றார் எதிர் முனை பிரபு.

"சரி. என்ன செய்திண்ணாலும் உடனே கூப்பிடுங்க" என்று அலைபேசியை உதவியாளனிடம் நீட்டினார்.

"இந்த பிரபுவை நம்பலாமில்லையா?" என்றான் உதவி முத்து
"சே. நல்ல மனுசன்.சொன்னா செய்யக் கூடியவர்" என்றார் அமைச்சர் மணிமாறன்.

தொடரும்...

கட்டுரை

தேடல் - 09

டித்வா (டிட்வா) உயிரைக்குடித்த புயல் பற்றி வலியில் நனைந்த இதயம் எழுதும் துயரின் தேற்றலுக்கான மீளுதல் வழி

ஜீரணிக்கவே முடிவதில்லையே சில துயர். திரைக்கதைகளையே.என்றொரு நாள் திரையில் கண்டு கலங்கிய கதையொன்று தான் அத்திபட்டி கிராமமே இல்லையாமென்று ..அதை ஒத்தது தான் இலங்கையையே புரட்டி போட்ட டிட்வா புயலை நினைத்தால் இன்னும் நெஞ்சுக்குள் பதறுதே.இதற்கு முன்னமே சுனாமி என்றும் கொராணா என்றும் விடுதலைபுலி என எத்தனையோ கோரதாண்டவத்தை கடந்தாலும் அத்தனையையுமே சுருட்டி போட்டொதிக்கி விட்டு உழுக்கி பார்த்தது டித்வா புயல்.

இவ்வாறு ஒரு நாளும் வரும் என்று யாராவது கனவிலோ? கற்பனையிலோ? நினைத்திருப்போமா? காற்றை எதிர்பார்த்தோம் ,மழையை வேண்டிநின்றிருப்போம், மின்சாரத்தை கண்டமேனியில் பாவித்திருப்போம், குடிக்கும் நீரை தாரைவார்த்திருப்போம், கவரஜ் இருக்கென்று செல்போனும் கையுமாக இருந்திருப்போம் அதற்கென்ற இத்தண்டனையோ?

இறைவனிடமே எதையுமே! கொண்டு சேர்ப்போம் ஏனிந்த தாக்கம் நினைத்து பார்க்கவே பயபந்து நெஞ்சை அடைக்குதே. இதுபோல துயர் இனியும் வேண்டாமென பிரார்த்தனைகள் நீழுதே!

டித்வா (டிட்வா)புயலாய் காற்றும் மழையும் சேர்ந்து பூமியையே உழுக்கிடுமென்று யார் தான் கனவு கண்டிருப்பர். சேதிகள் ஒவ்வொன்றாய் வந்து நெஞ்சை அதிர்வாக்கியதில் பிரார்த்தனைகள் கூடினாலும் உறவுகளோடு உறவாடிய பொழுது தான் நலமா பாதுகாப்பு தானென்று தெரிந்துக்கொள்ள வழியற்ற நாளை எண்ணி எண்ணியும் என்னாகும் மழை விடுமா? காற்றின் வேகம் குறையுமா? இது உலக முடிவின் நாளா?என பதறினதை சொல்ல முடியுமா?

கவிஞர் சீஹனாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

கட்டுரை

தேடல் - 09

திங்கள் தொடங்கிய சிறு துளிமழை வெள்ளி வரை தொடர்ந்த மழை வெள்ளமென நிலப்பரப்பையே விழுங்கிருந்தது. சிறுகசிறுக தாழ்வு பிரதேசமெல்லாம் நீரால் நிரைந்து வீடுகள் உள்ளும் அனுமதியின்றி உள் நுழைந்து தன் ஆதிக்கமே செய்ய தொடங்கியது.

காற்று வாழ் உயிரும் புழுக்கள் பூச்சிகள் பாம்புகள் தண்ணீரோடு வீடுவரை வந்தால் என்ன செய்திட முடியும் உயிரே போயிடுமா?இது தான் கடைசி நாளா? என்ற ஏக்கம் தந்த டிட்வா புயலும் புரட்டி போட்டு வாட்டி விட்டதே. யார் தான் இதை கனவிலும் கண்டிருப்பர். மனிதன் செய்தால் தண்டிக்கலாம். படைத்தோனின் விதிவிளையாட்டின் கோரதாண்டவத்தில் என்ன செய்தால் தகுந்திடும் பிரார்த்திப்பதை தவிர.

யாருமே நினையாத துயர் சேதி தானே ஒரு கிராமமே மண் மேடுகள் மழைநீரில் தொப்பலாகி தொப்பொன்று வீழுமென்றா நினைத்திருப்பார்கள். பாதுகாப்பாக இருப்பதாக எண்ணி நிம்மதியாய் தூங்கிருப்பார்களா?நாளை எல்லாமே மாறிடுமென நம்பிக்கையில் துயில்ந்திருப்பார்களா? இலங்கையின் கண்டியின் ரம்புக்கல கிராமம் அழகு நிறைந்த கிராமமாம். இப்போது மணல் மேடுகள் நிறைந்து புதைக்குழியானதா?

சேதிகள் வருகிறது சுமார் 50 குடுபங்களாவது இருந்திருக்கலாமென்று சுமார் 200வது நபர்கள் இருந்துருக்கலாமென்று, என்ன என்னவோ உயிராபத்துகள் நிகழ்ந்திருந்தாலும் ஒரே நேரத்தில் ஒரு ஊரே காணாமல் போனது என்பதை அவ்வளவு எழிதில் கடந்து விட முடியவில்லை. மரணம் காரணத்தால் ஆனது என்பதால் அனைவரும் ஒரே நேரத்தில் விதிமுடிவில் மரணத்தை அடைந்திருக்கலாமோ? அதனை காரணப்படுத்துவதற்காக தானா இந்த மண்சரிவு என உள்ளம் ஒருபக்கம் குடைச்சல் கொடுக்கிறது.

கவிஞர் சீஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

மண்சரிவிற்கு முன் அவர்கள் என்ன நிலமையில் இருந்திருப்பார்கள் நாளை விடியல் வசந்தமாகிருக்கும் என்றா?இல்லை அதனை யோசனையே இல்லாது அடுத்த வாழ்வை தொடங்க மரணித்திருக்கலாமா?

(திருக்குர்ஆன் 4:78)

"நீங்கள் எங்கிருந்தாலும் மரணம் உங்களை அடைந்தே தீரும்;
உறுதியான உயரமான கோட்டைகளுக்குள் இருந்தாலும் கூட.
அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால், 'இது அல்லாஹ்விடமிருந்து வந்தது' என்று கூறுகின்றனர்.
அவர்களுக்கு தீங்கு நேர்ந்தால், 'இது உம்மால் (நபியே!) வந்தது' என்று கூறுகின்றனர்.

(நபியே!) நீங்கள் சொல்லுங்கள்:
'அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே வந்தவையே.'
ஆனால் இந்தக் கூட்டத்துக்கு என்ன ஆச்சு? எந்தச் செய்தியையும் சரியாகப் புரிந்துகொள்ள விரும்பவில்லை!"

இந்த திருக்குர்ஆன் விளக்கமாக்கப்பட்டால் ;
மரணம் — எவ்வளவு பாதுகாப்பான இடத்தில் இருந்தாலும், அது தடையின்றி மனிதனை அடையும் என்பதையும்
நன்மை— தீமை — சிலர் நன்மையை அல்லாஹ்விடமிருந்து வந்தது என்றும், தீமையை அதவாது வேறொரு மனிதன் மேலோ அல்லது பொருளின் மீதோ! குற்றம் சாட்டுவதாகவும் கூறப்படுகிறது.

அல்லாஹ் இந்த வசனத்தில், "அனைத்தும் என் விதியால், என் அறிவால் மட்டுமே நிகழ்கிறது" என்று தெளிவாக விளக்குகிறான்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

(திருக்குர்ஆன் :10:49)

"(நபியே!) நீங்கள் கூறுங்கள்:
'அல்லாஹ் நாடியதைத் தவிர, எந்தவொரு நன்மையையோ தீமையையோ எனக்கு நான் ஏற்படுத்திக் கொள்ள சக்தி பெற்றவன் அல்ல.' ஒவ்வொரு சமூகத்திற்கும் (ஜாதிக்கும், தேசத்திற்கும், மக்கள் குழுமங்களுக்கும்) ஒரு நிர்ணயிக்கப்பட்ட காலவரையறை உண்டு.அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட காலம் வந்துவிட்டால், அவர்கள் அதை ஒரு கணம் கூட பிந்தப்படுத்தவும் முடியாது; அதற்கு முன்பாகவும் முடியாது."

இதனை விளக்கமாக்கி பார்த்தால்;
1. சக்தியின் உரிமையாளர் அல்லாஹ் மட்டுமே மனிதன் நன்மை அடைந்தாலும், தீமை வந்தாலும்,அது அல்லாஹ்வின் அனுமதி இல்லாமல் நிகழாது.அல்லாஹ் அனுமதித்தால் மட்டுமே ஒரு விஷயம் நடக்கும்.

2. ஒவ்வொரு தேசத்துக்கும், குடும்பத்துக்கும், மனிதனுக்கும் ஒரு "நேரம்" உள்ளது. அல்லாஹ் ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒரு தவணைக்காலத்தை நிர்ணயித்துள்ளான். அது முடியும் போது: அதை ஓர் நிமிடம் கூட தாமதிக்கவும் முடியாது, ஒரு கணம் கூட முன்பாக வரவும் முடியாது.


இது மனிதன் எவ்வளவு ஆற்றல் உடையவனாக இருந்தாலும், அல்லாஹ்வின் தீர்ப்புக்கு முன் சக்தியற்றவன் என்பதைக் காட்டுகிறது.

இவ்வசனத்தை கொண்டு நம்மை நமே தேற்றிக்கொள்வதே சிறந்தது. எல்லாம் நன்மைக்கே என்றும் அல்லாஹ் போதுமானவன் என்றும் நம்மை நாம் அமைதிப்படுத்தினால் பொறுமையோடு ஏற்று நடந்தால் போதும். சிலவைகளை எக்காலத்திலுமே மறக்க முடியாது தான்.

கவிஞர் சீஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

ஆசிரியர் : பெருமாள் முருகன் ; வகை: நாவல் ; பக்கங்கள்:200

பெருமாள்முருகன் இவர் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கூட்டப்பள்ளியில் பிறந்தவர். தமிழ் வட்டார நாவலின் முன்னோடியாகிய எழுத்தாளர் ஆர். சண்முகசுந்தரம் குறித்து ஆய்வு செய்து தமிழ் இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். அரசு கலைக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். ஆத்தூர் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் ஓராண்டு முதல்வர் பொறுப்பு வகித்தார். பின்னர் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றி செப்டம்பர் 2022இல் விருப்ப ஓய்வு பெற்றார்.




#மாதொருபாகன், #அர்த்தநாரி படித்ததன் நீட்சியாக #ஆலவாயன் நாவலையும் படித்து விடுதல் நலம் என்று தோன்றியது சரி என்று படித்தும் விட்டேன் இனி விமர்சனபகுதிக்குள் வருவோம்.

ஆலவாயன் இது மதுரையம்பதி சொக்கேசனுக்கு வழங்க பெரும் பெயர்களில் ஒன்று. சரி திருமுறைகள் எதாவது இதை குறிப்பிடுகிறதா என்று பார்த்தால் திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தால் குறிப்பிடுகிறார் முதல் பதிகத்தை மட்டும் இங்கு தந்துள்ளேன்.

மானின் நேர் விழி மாதராய் வழுதிக்கு மாபெருந்தேவி கேள்
பால் நல் வாய் ஒரு பாலன் ஈங்கு இவன் என்று நீ பரிவு எய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன் திருஆலவாய் அரன் நிற்கவே!

மந்திர மாவது நீறு
  வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
  துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
  சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
  திருஆல வாயான் திருநீறே. 1

மேலும் அவர் குறிப்பிடுகிறார். இப்போது நூல் குறித்த விமர்சனத்திற்கு செல்வோம். ஆரம்பமே காளியின் மரணத்துடன் ஆரம்பிக்கிறது. துக்கம் ஆன வீட்டில் நடைபெறும் நிகழ்வுகள் அதில் அரங்கேற்றமாய் நடைபெறும் வினையுல்லவர்களின் சொற்கள் வினையற்றவர்களை பாதிக்கும் விதம் என்று விவரிக்கிறார் எழுத்தாளர் பெருமாள் முருகன்.
தனக்கு ஒரு துணையில்லை எனில் இந்த சமூகம் நரம்பில்லாத நாக்கை நரக வேதனையை அந்த பெண்ணிற்கு தரும் கொடுமையை என்னவென்று உரைப்பது வார்த்தைகளில் வடிப்பது கடினம்.
சிலரின் வருகை அந்த பெண்ணின் மனதை தேற்றும் சிலரின் வருகை அந்த பெண்ணின் மனநிலையை சீர்குலைக்கும் என்பதை விவரிக்கிறது இந்த நாவல். மரணத்திற்கு பிறகு பொண்ணாவின் வாழ்க்கை எவ்வாறு நகர்கிறது என்பதையும் விவரிக்கிறார் எழுத்தாளர் பெருமாள் முருகன். கிராமத்தில் இருக்கும் கிராம அலுவலர்கள் செய்யும் சேட்டைகள் அதனால் மக்கள் படும் பாடு என்று நீள்கிறது கதை. பெண்ணின் மனநிலையை அறிந்து எவ்வளவு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்த பழந்தமிழ் கூட்டம் ஏற்படுத்தியுள்ளது


அதேநேரம் அந்த பெண்ணின் தற்போதைய நிலை தேற்ற கூடியதாக அமைந்தாலும் எதிர்காலத்தில் யாரும் எதுவுமே சொல்லி விடாதபடி தான் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தனது கணவர் கவனித்த அத்தனை வேலைகளையும் ஒரு பெண் தன்னந்தனியாக இருந்து கவனிப்பதற்கு எவ்வளவு பெரிய தைரியம் வேண்டும் என்று சொல்கிறது இந்த நூல்.

இந்த நாவல் மாதொருபாகன் ஏற்படுத்திய அதே தாக்கத்தை மனதில் ஏற்படுத்தி உள்ளது. மரணத்தில் ஆரம்பித்த இந்த நாவல் குழந்தையின் ஜனனத்தில் முடித்திருப்பது இறந்தவரே குழந்தையாக பிறப்பார்கள் என்பதை காட்டுகிறது.

குழந்தையிமை எவ்வளவு பெரும் கொடுமையாக இந்த சமூகத்தில் இந்த பெண்களுக்கு விதிக்கப்பட்டது என்பதை நினைக்கும்போது மனம் தன்னையும் மீறி அழதான் செய்தது. ஒரு குழந்தை எப்படி எல்லாம் மனதின் மனங்களை மாற்றி விடுகிறது.


ஆலவாயா! அம்பலத்தரசே! அம்மையே!அப்பனே! ஏதுமறியா இந்த மானிடர் கூட்டத்தை காத்தருள்வாய் அர்த்தநாரீஸ்வரரே என்று அகிலமெல்லாம் அடக்கி ஆளும் அவனின் திருவடி வணங்கி மகிழ்கிறேன்.




திரு தினேஷ் கண்ணா

கட்டுரை

## பிறப்பும் கல்வியும்



அண்ணாமலை ரெட்டியார் தென்காசி மாவட்டம், சங்கரன் கோவில் ஊரை அடுத்துள்ள சென்னிகுளத்தில் பிறந்தார். திருநெல்வேலி இராமசாமிக் கவிராயரிடம் கல்வி கற்று, பின்னர் ஊற்றுமலை ஜமீந்தார் சுந்தரதாஸ் பாண்டியனின் சமஸ்தான வித்துவானாக விளங்கினார்.

பதினெட்டு வயதிலேயே ஊற்று மலைக்குச் சென்று, அங்கு குறுநிலத் தலைவராக இருந்த இருதயாலய மருத்தப்பத் தேவரின் அரசவைப் புலவராகவும் இருந்தார்.

## இயற்றியவை

- காவடிச் சிந்து
- வீரை தலபுராணம்
- வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம்
- கோமதி அந்தாதி
- சங்கரன் கோவில் திரிபந்தாதி
- கருவை மும்மணிக்கோவை ஆகியவற்றை இயற்றினார்.

## காவடிச்சிந்து பாடல் பகுதி

தெள்ளுதமி ழுக்குதவு சீலன், - துதி
 செப்பணாம லைக்கும் அனு கூலன் - வளர்
செழிய புகழ்விளைத்த கழுகு மலைவளத்தை

திரு. அ. வில்சன், இதழாசிரியர்


கட்டுரை

காவடிச்சிந்து பாடல் பகுதி

தெள்ளுதமி ழுக்குதவு சீலன், - துதி
செப்பணாம லைக்கும் அனு கூலன் - வளர்
செழிய புகழ்விளைத்த கழுகு மலைவளத்தை
தேனே! சொல்லு வேனே.
வெள்ளிமலை யொத்தபல மேடை, - முடி
மீதினிலே கட்டுகொடி யாடை, - அந்த
வெய்யவன் நடத்திவரு துய்யஇர தப்பரியும்
விலகும் படி இலகும்.

மறைவு

இவர் நோய் காரணமாக 1891 ஆம் ஆண்டு, தனது 26 ஆவது வயதில் காலமானார்.






திரு. அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நமதே

**வாழ்வில் தோல்வியையே**

**சந்திக்காதவன் எதையுமே**

**முயற்சிக்காதவனே ஆவான்**


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே  முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு  அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு  சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com